Regional School of Printing

*300 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) Whether the Government propose to shift the Regional School of Printing at Broadway to Adyar ; and

(*b*) If so, what alternative use, would this building be put to?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) வட சென்னையில் உள்ள வட்டார அச்சுத்தொழில்பள்ளி அவ்விடத்திலிருந்து மாற்றப்பட்டவுடன், அக் கட்டடங்களில் மகளிர்க்கான அரசாங்கக் கலைக்கல்லூரியை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

திரு. கே. வினாயகம் : இந்த அச்சுத் தொழில் பள்ளியை அடையாறில் நிறுவுவதற்கு போதிய அளவிற்கு இப்பொழுது இட வசதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இங்கே பெண்கள் கலைக் கல்லூரி நிறுவுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. ஆகையினால் அச்சுத் தொழில் பயிற்சிப் பள்ளியை அடையாறு காம்பஸுக்குள் கொண்டு போவது பல்வேறு வகையில் பொருத்தமுடையதாக இருக்கும், அங்கு வேறு பல பாலிடெக்னிக்குகளும் இருக்கின்றன. கல்லூரி கட்டடத்திற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால், அந்த நிலையில் அங்கே பெண்கள் கலைக் கல்லூரி நிறுவுவதற்கு அந்த இடம் பயன்படும்.

Industrial Estate at Martandam

*301 *Q.*—THIRU M. WILLIAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up some Departmental Units in the Industrial Estate at Martandam : and

(*b*) the number of units that are working in the Martandam Estate?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) மூன்று தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நான்கு தொழில் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. திரு. எஸ்கே மோட்டார்ஸ் நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட ஒரு தொழில் பிரிவு இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

THIRU M. WILLIAM : Mr. Speaker, in view of the backwardness of the area, will the Government be pleased to consider the question of opening some departmental units as is being done in Pettai and other Industrial Estates?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கூறுகின்ற அத்தகைய கருத்தைப்பற்றி இப்பொழுது எந்த முடிவும் எடுக்கப் படவில்லை. அதைக் கருத்தில் கொண்டு ஆராயப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பல ஆண்டுகளாக அரசாங்கத்தினால் கட்டப்பட்ட ஒரு தொழில் நிறுவனமும் துவக்கப்படாமல் இருக்கும் அந்த இடத்திலே, அதற்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான கூறுபாடுகளை அதற்குள்ள அதிகாரிகள் மூலம் தெரிவித்தால், எந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம் என்பதை யோசித்து, அதற்கான முயற்சியை மேற் கொள்ளலாம்.